**12.11.2021 – மாலை 6.00**

**தமிழ்நாட்டில் கனமழை – முழு வீச்சில் நிவாரணப் பணிகள்**

**வங்கக் கடலில் மீண்டும் காற்றழுத்த தாழ்வு பகுதி – தயார் நிலை**

**மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்**

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் தகவல்**

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் 11.11.2021 மாலை கரையை கடந்த நிலையில் 13.11.2021 அன்று தெற்கு அந்தமான் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக உள்ளது என்றும், இந்த காற்றழுத்த தாழ்வு பகுதியானது மேற்கு வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து 15.11.2021 அன்று கிழக்கு மத்திய வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் எனவும் இந்திய ஆய்வு மையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று (12.11.2021) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிக கன மழையும்,

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, நீலகிரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, விருதுநகர், தென்காசி மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழையும் பெய்யக்கூடும்.

13.11.2021 வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, நீலகிரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, விருதுநகர், தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழையும் பெய்யக்கூடும்.

14.11.2021 திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், ஈரோடு, நீலகிரி, கோயம்புத்தூர், தேனி மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும் பெய்யக்கூடும்.

15.11.2021 வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், சேலம், தருமபுரி, நீலகிரி, ஈரோடு, தேனி மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழையும் பெய்யக்கூடும்.

**முக்கிய நீர்த்தேக்கங்களிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படும் விபரம்**

மேட்டூரிலிருந்து 12,150 கன அடியும்,

செங்குன்றத்திலிருந்து 2,718 கன அடியும்,

சோழவரம் ஏரியிலிருந்து 2,455 கன அடியும்,

செம்பரம்பாக்கத்திலிருந்து 1,646 கன அடியும்,

பூண்டியிலிருந்து 18,224 கன அடியும்

வீராணம் ஏரியிலிருந்து 1,319 கன அடியும் திறந்து விடப்படுகிறது.

பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து இன்று மதியம் (12.11.2021) 18,000 கன அடி உபரி நீர் திறந்துவிடப்பட்டதைத் தொடர்ந்து, பொதுவான எச்சரிக்கை நடைமுறை Common Alert Portocol மூலம் 2,67,162 நபர்களது அலைபேசிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது. மேலும், வேலூர் மாவட்டத்தில் பொன்னை அணைக்கட்டிலிருந்து 15,000 கன அடியிலிருந்து உபரி நீர் திறந்துவிடப்பட்டதைத் தொடர்ந்து, பொதுவான எச்சரிக்கை நடைமுறை Common Alert Portocol மூலம் 36,720 நபர்களது அலைபேசிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் முன்னறிவிப்பின்படி, நீலகிரி மாவட்டத்தில் நவம்பர் 12, 13, 14, 15, 16 ஆகிய நாட்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் மேற்கண்ட நாட்களில் நீலகிரி மாவட்டத்திற்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என TNSMART செயலி மூலமாகவும், சமூக வளைதலங்கள் வாயிலாகவும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்த மழையின் காரணமாக 68,651.91 ஹெக்டேர் வேளாண் பயிர்கள் நீரில் மூழ்க்கியுள்ளன, 5,127.82 ஹெக்டேர் பயிர்கள் 33%–ற்கு மேல் சேதமடைந்துள்ளன

4,020.57 தோட்டக்கலை பயிர்கள் நீரில் மூழ்க்கியுள்ளன. 391.61 ஹெக்டேர் பயிர்கள் 33%–ற்கு மேல் சேதமடைந்துள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின் 5 பாலங்களும், 259 சிறு பாலங்களும், 1012.99 கி.மீ நீளமுள்ள சாலைகளும் சேதமடைந்துள்ளன என்றும் 72 இடங்களில் நிலச்சரிவும் 9 இடங்களில் சேதமும் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

காஞ்சிபுரம் மாவட்டம், வரதராஜபுரம் பகுதியில் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கவும், நிவாரண மையங்களில், தேவையான அடிப்படை வசதிகள் செய்யவும், வெள்ள நீரை வெளியேற்றவும், அனைத்து துறைகள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினரும் ஒருங்கிணைந்து மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தேசிய பேரிடர் மீட்பு படையின் 7 குழுக்கள், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மீட்பு பணிகளை மேற்கொள்ள மூன்று குழுக்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் தலா இரண்டு குழுக்கள் தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**நிவாரண முகாம்கள்**

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராணிப்பேட்டை, திருவள்ளூர், திருவண்ணாமலை, கடலூர், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திருவாரூர், வேலூர், விழுப்புரம் மாவட்டங்களில் மொத்தம் 185 முகாம்களில், 10,073 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் 2888 நபர்கள் 55 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை, 33,32,300 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னையில் தொடர் மழை காரணமாக வெளியில் வர இயலாத நிலையில் உள்ள பொது மக்களுக்கு உணவு வழங்குவதை உறுதி செய்ய வார்டுக்கு ஒருவர் வீதம் 200 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவருடன் இணைந்து இந்த பணிகளைக் கண்காணிக்க 15 மண்டலங்களுக்கும் உதவி வருவாய் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- செங்கல்பட்டு மாவட்டத்தில், 2843 நபர்கள் 71 நிவாரண முகாம்களிலும்,
- காஞ்சிபுரம் மாவட்டத்தில், 1514 நபர்கள் 39 நிவாரண முகாம்களிலும்,
- கடலூர் மாவட்டத்தில், 49 நபர்கள் 3 நிவாரண முகாம்களிலும்,

- நாகப்பட்டினம் மாவட்டத்தில், 3217 நபர்கள் 12 நிவாரண முகாம்களிலும்,
- பெரம்பலூர் மாவட்டத்தில், 72 நபர்கள் 2 நிவாரண முகாம்களிலும்,
- புதுக்கோட்டை மாவட்டத்தில், 380 நபர்கள் 6 நிவாரண முகாம்களிலும்,
- இராணிப்பேட்டை மாவட்டத்தில், 98 நபர்கள் 2 நிவாரண முகாம்களிலும்,
- திருவள்ளூர் மாவட்டத்தில், 569 நபர்கள் 13 நிவாரண முகாம்களிலும்,
- திருவண்ணாமலை மாவட்டத்தில், 361 நபர்கள் 9 நிவாரண முகாம்களிலும்,
- திருவாரூர் மாவட்டத்தில், 68 நபர்கள் 1 நிவாரண முகாமிலும்,
- விழுப்புரம் மாவட்டத்தில், 822 நபர்கள் 25 நிவாரண முகாம்களிலும்,
- அரியலூர் மாவட்டத்தில், 80 நபர்கள் 2 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**

- மழை நீர் தேங்கியுள்ள 534 பகுதிகளுள், 204 பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீர், இராட்சத பம்புகள் மூலம் அகற்றப்பட்டுள்ளது. எஞ்சிய 330 பகுதிகளில் மழை நீரை அகற்றும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.
- மழை நீரால் சூழப்பட்டுள்ள 22 சுரங்கப்பாதைகளில், 17 சுரங்கப்பாதைகளில் மழை நீர் அகற்றப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 5 சுரங்கப்பாதைகளில் மழை நீரை வெளியேற்றும் பணி நடைபெற்று வருகிறது.
- சாலைகளில் விழுந்த 509 மரங்கள் உடனடியாக அகற்றப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 2007 மருத்துவ முகாம்கள் மூலம் 79,043 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- மழை நீர் சூழ்ந்த பகுதிகளில் உள்ள மக்களை மீட்க 55 படகுகளும், மழை நீரை வெளியேற்ற 46 JCB–களும், 620 இராட்சத பம்புகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- 17,654 புகார்கள் வரப்பெற்று, 6,709 புகார்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய புகார்களின் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- சென்னையில் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் 1070, மாவட்டங்களில் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசியுடன், 24 மணி நேரமும் இயங்கி வருகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்பான புகார்களுக்கு பொதுமக்கள் 1913 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.
- 1070–ல் இன்று 414 புகார்கள் பெறப்பட்டு 221 புகார்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளது.
- மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண். 1077–ல் இன்று 1,982 புகார்கள் பெறப்பட்டு, 1,852 புகார்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளது.
- பொதுமக்கள் TNSMART இணையதளத்திலும், வாட்ஸ் அப் எண் **9445869848** மூலமாகவும் புகார்களை தெரிவிக்கலாம்.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களது ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலர் /வருவாய் நிருவாக ஆணையர் திரு. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப., நில நிருவாக ஆணையர் திரு. எஸ். நகராஜன், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம்,**
**சென்னை**